TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

C 8129814

1. District மாவட்டம் : Tirunelveli | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year: ஆண்டு 2025 | FIR No.: மு.த.அ. எண் 02/2025 | Date: நாள் 16.04.2025

2. (i) Act சட்டம்: PC (Amendment) Act, 2018 — Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் 11.03.2025 — Date to : நாள் வரை 12.30 hrs
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 15.04.2025 — Time to : நேரம் வரை 19.00 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.04.2025 — Time : நேரம் 10.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16.04.2025 — Time : நேரம் 10.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — Thatchanallur Zonal Office, Tirunelveli Municipal Corporation, Tirunelveli. 7 Km North West.
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr.M.Balsingh — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.Meenakshisundaram
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 29.09.1984 — (d) Nationality : நாட்டினம் INDIAN — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Govt Servant — (g) Address : முகவரி Door No.52B/1, Kambaramayana street, Vannarpettai, Tirunelveli District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr.Kalivasanth, Bill Collector, Ward No.11, Thatchanallur Zonal Office, Tirunelveli Municipal Corporation, Tirunelveli.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 16.04.2025-ம் தேதி காலை 10.00 மணிக்கு திருநெல்வே ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் D.ராபின் ஞானசிங் ஆகிய நா நிலைய பொறுப்பில் இருக்கும்போது திரு.மீ.பால்சிங் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகா மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட் திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல அலுவலகத்தில் 11 வது வார்டு வரி வசூலராக பணிபுரியும் திரு.காளிவசந்த் என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும், புகார் மனுவின்படி ஊழல் தடுப் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து, அவர்களின் அனுமதி பெற்று 16.04.2025-ம் தேதி 11.30 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2025 u/s 7(a) of PC (Amendment) Act, 2018 என வழக்கு பதிவு செய்தேன்.

/ Separate Sheet attached /

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

மீ.பால்சிங்
16-04-2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 16/4/25
Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
16/04/2025
at 12.00 hrs.

Name: பெயர் D. Robin Gnanasingh
Rank: நிலை ............... No. எண் ...........
Inspector of Police
VACB, Tirunelveli.

**Continuation of Tirunelveli Vigilance and Anti-Corruption Crime No.02/2025:-**

மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் மீ.பால்சிங், த/பெ.மீனாட்சிசுந்தரம், 52B/1, கம்பராமாயணத்தெரு, வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-3. பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, திருநெல்வேலி மாவட்டம். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது தந்தை 03.06.2012-ம் தேதி இறந்துவிட்டார். பாளையங்கோட்டை, இணை-I சார் பதிவாளர் அலுவலக பாக பாத்திய விடுதலை பத்திரம் எண்.387/2024-ன் படி எனது தந்தை பெயரில் உள்ள 2.5 சென்டு இடத்தில் உள்ள தரைதளம் சுமார் 400 சதுர அடி உள்ள கான்கிரீட் மற்றும் முதல்தளம் சுமார் 350 சதுர அடியில் ஆஸ்பெட்டாஸ் சீட் போட்ட இரண்டு அறைகளுடன் கூடிய வீட்டை 23.01.2024-ம் தேதி எனது அம்மா திருமதி.மீனா, எனது அண்ணன் திரு.டென்சிங் மற்றும் தங்கை திருமதி.அனிதா ஆகியோர்கள் சேர்ந்து எனது பெயருக்கு எழுதிகொடுத்துள்ளார்கள். எனது தந்தையின் பெயரில் இருந்த மேற்படி வீட்டின் சொத்து வரியை, எனது பெயருக்கு மாற்றம் செய்ய வேண்டி 30.01.2025-ம் தேதி திருநெல்வேலி ஜங்சன், திருநெல்வேலி மாநகராட்சி வணிக அரங்கம் முதல் தளத்தில் இயங்கி வரும் தச்சநல்லூர் மண்டல அலுவலகம் சென்று அங்கு பணியில் இருந்த தச்சை மண்டலம், 11-வது வார்டு வரிவசூலர் திரு.காளிவசந்த் என்பவரிடம் எனது மனுவினை கொடுத்தேன். அவர் அதில் இணைக்கப்பட்டிருந்த ஆவணங்களை சரிபார்த்து, அதில் சுருக்கொப்பம் செய்து அந்த மனுவை, அங்கிருந்த மனு பெட்டியில் போடச் சொல்லி நான் பார்த்துக் கொள்கிறேன் என்று என்னிடம் கூறினார். பின்னர் என் மனு மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை தெரிந்து நான் மீண்டும் 11.03.2025-ம் தேதி மதியம் சுமார் 12.30 மணியளவில் வரிவசூலர் திரு.காளிவசந்த் அவர்களை நேரில் சென்று அவர்களது அலுவலகத்தில் வைத்து எனது மனு சம்பந்தமாக கேட்டபோது, அவர் என்னிடம் ரூ.5,000/-ம் தந்தால் தான் என்னுடைய பெயரில் சொத்து வரி பெயர் மாற்றம் செய்ய முடியும் என்று கூறினார். நான் அவரிடம் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்று கூறினேன். அதற்கு அவர் ரூ.1,000/-ம் குறைத்துக் கொண்டு மீதி பணத்தை ரெடி செய்து கொண்டு வாருங்கள் என்று கூறினார். நானும் வேறு வழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் நேற்று (15.04.2025-ம் தேதி) மாலை சுமார் 6 மணியளவில் வரி வசூலர் திரு.காளிவசந்த் என்பவர் அவரது செல்போன் எண்.9080005830-ல் இருந்து எனது அலைபேசி எண்.9498177579-ற்கு போன் செய்தார்.

அப்போது அவரது அழைப்பை என்னால் எடுக்க முடியவில்லை. பின்னர் மாலை சுமார் 7 மணியளவில் நான் மேற்படி திரு.காளி வசந்த் என்பவரது செல்போன் எண்ணிற்கு போன் செய்தபோது அவர் எனது மனு மீதான வேலை முடிந்துவிட்டது. உத்தரவு மட்டும் இன்னமும் கையொப்பம் ஆகவில்லை என்றும், இன்று (16.04.2025-ம் தேதி) ஏற்கெனவே பேசியபடி பணம் ரூ.4,000/-ஐ ரெடி பண்ணிவிட்டு மதியத்திற்கு மேல் போனில் பேசிவிட்டு அவர் சொல்லும் இடத்திற்கு வந்து பணத்தை தருமாறு சொன்னார். அதற்கு நான் நீங்கள் கேட்ட பணத்தில் ஏதாவது குறைப்பதற்கு வழி உள்ளதா என்று கேட்டேன். அதற்கு அவர் எனக்குரிய பங்கை மட்டும் நான் ஏற்கெனவே குறைத்துவிட்டேன். மீதமுள்ள பணம் ரூ.4,000/-ஐ தந்தால் தான் சொத்துவரிக்கான உத்தரவில் கையெழுத்து பெற்று அவரால் தரமுடியும் என்று கூறினார். நானும் வேறு வழியில்லாமல் சரி என்று சொன்னேன். பின்பு எனது வீட்டிற்கு வந்து நான் யோசித்து பார்த்த பொழுது அரசு வேலையை செய்வதற்கு என்னிடம் லஞ்சமாக பணம் கேட்கிறாரே என்று என் மனம் சங்கடப்பட்டது. எனக்கு வரிவசூலருக்கு லஞ்சமாக பணம் கொடுத்து சொத்து வரியை எனது பெயருக்கு மாற்றம் செய்ய விருப்பமில்லை. வரி வசூலர் திரு.காளிவசந்த் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.4,000/- நான் வைத்துள்ளேன். என்னிடம் லஞ்சம் கேட்கும் திருநெல்வேலி மாநகரம், தச்சை மண்டலம், 11-வது வார்டு வரி வசூலர் திரு.காளிவசந்த் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd. (மீ.பால்சிங்) 16/04/2025.

Sir, Received this complaint today on 16.04.2025 at 10.00 hrs and conducted confidential enquiry and found prima facie, hence informed the matter to the Superintendent of Police, Southern Range, DVAC, Chennai, obtained permission orally and I registered a case in Tirunelveli V&AC Cr.No.02/2025 u/s 7(a) of P.C (Amendment) Act, 2018 today on 16.04.2025 at 11.30 hrs. sd. D.Robin Gnanasingh, 16.04.2025. Inspr., of Police, V&AC, TIN.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

[signature] 16/4/25
Inspr. V&AC
TIN